# பரத நாட்டியம்

தரம்

# 12

## ஆசிரியர் வழிகாட்டி

(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)




அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை
www.nie.lk
info@ni.lk

# பரத நாட்டியம்

## ஆசிரியர் வழிகாட்டி
## தரம் 12

**(2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

**அழகியற்கல்வித் துறை,**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞான பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம**
**இலங்கை.**
**www.nie.lk**
**info@ni.lk**

பரத நாட்டியம்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் - 12
பாடத்திட்டம் - 2017

தேசிய கல்வி நிறுவகம்.

ISBN

முதற் பதிப்பு : 2017
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.

அழகியற் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை.

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம,
இலங்கை.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்குமான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப் பெறுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடையும் பொருட்டு, பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பெற்றுள்ள ஆசிரியர் வழிகாட்டியை, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர் களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள் மற்றும் மானுடவியல், சமூகவிஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

## கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| ஆலோசனையும் வழிகாட்டலும் | : | கல்விசார் அலுவல்கள் சபை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| பாட நிபுணத்துவ ஆலோசனை | : | திரு. சுதத் சமரசிங்ஹ,<br>பணிப்பாளர் - அழகியற்கல்வித் துறை. |
| பாட இணைப்பாக்கம் | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| எழுத்தாளர் குழு<br>(உள்வாரி) | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| (வெளிவாரி) | : | திருமதி பாரதி சிவயோகநாதன்,<br>ஆசிரிய ஆலோசகர்,<br>வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு - 02. |
| மொழி மேற்பார்வை | : | திரு.து.இராஜேந்திரம்,<br>ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>திறந்த பல்கலைக்கழகம். |
| கணினிக் கோர்ப்பும் வடிவமைப்பும் | : | செல்வி செல்வரஞ்சினி செல்லத்துரை,<br>ஆசிரிய நூலகர்,<br>யா / தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை<br>மகா வித்தியாலயம். |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | திரு. ரவீந்ர தேநுவர. |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்.

2017ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 12 இற்கான பரதநாட்டிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தற் செயன்முறையை வெற்றிகரமாக நடத்துவதற்குத் துணைபுரிவதற்காகவே இவ் வழிகாட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனைப் பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

- ❖ பாடசாலையின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கமைவாக நேரமுகாமை செய்தல்.

- ❖ 5 தேர்ச்சிகளின் கீழ், வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கமைவாக 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயன்முறைத் தேர்ச்சிகளின் மட்டங்களுக்கு மாதிரிச் செயற்பாடானது தரப்பட்டுள்ளது. அந்தந்தத் தேர்ச்சி மட்டத்திற்கமைவாக விதந்துரைக்கப்பட்டுள்ள 5 தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, திட்டமிட்டுச் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

- ❖ தாமே 5 செயற்பாடுகளைச் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனமெடுப்பது பயனுடையதாகும்.
  - ➢ அழகியல் சார்ந்த அன்றேல் பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்வைப்பொன்றின் மூலம் களிப்பூட்டத்தக்கவாறு படிக்கும் விடயங்களின் மூலம் மாணவரைப் பாடத்தின் பால் ஈர்த்தல். மீட்டல், ஊக்கமளித்தல் மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
  - ➢ மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு ஆக்கபூர்வமான கற்றல் கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு பின்னூட்டலைக் கையாண்டு செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
  - ➢ முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீளாய்வு, பின்னூட்டல் வேலைகள், ஒப்படைகள் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்தப் பாடத்தை நிறைவு செய்தல்.
  - ➢ இந்த ஆசிரியர் வழிகாட்டி ஒரு வழிகாட்டல் மாத்திரமே ஆகும். பாடம் சார்ந்த நூல்கள், இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுதல் மூலம் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை மேலும் செழுமைப்படுத்திக் கொள்ளலாம்.

- ❖ அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளமையால் 5 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

- ❖ பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு மூன்று தவணைக்குரிய செயற்பாட்டினை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துக.

| தவணை 1 | தவணை 2 | தவணை 3 |
|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் : 1.1.1, 2.1.1, 3.1.1, 4.1.1, 4.2.3, 4.2.4, 4.2.5 5.1.1 | செயற்பாட்டு இலக்கம் : 1.2.1, 2.2.1, 3.2.1, 3.2.2, 3.2.3, 4.2.1, 4.3.1, 5.2.1 | செயற்பாட்டு இலக்கம் : 1.3.1, 2.3.1, 3.2.4, 3.3.1, 3.4.1, 3.5.1, 4.2.2, 5.3.1, 5.3.2 |

**தேர்ச்சி 1:0 : நயத்தல்**

- நயத்தல் தொடர்பான கற்பித்தலை மேற்கொள்ளும் போது, மாணவர்களின் இரசனையைத் தூண்டி அவர்களின் வெளிப்பாட்டை வெளிக்கொண்டு வரவேண்டும். அதற்குக் கவர்ச்சியான முறையில் கற்பித்தற் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

**தேர்ச்சி 2:0 : ஆக்கத்திறன்**

- ஆக்கத்திறனில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது, அவர்களுக்குரிய வழிகாட்டல்கள் மாத்திரம் ஆசிரியரினால் வழங்கப்பட வேண்டுமேயல்லாமல் எச் சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்ட ஆக்கம் ஆசிரியரினால் ஆக்கி வழங்கப்படக்கூடாது.
- அனைத்தும் மாணவர்களின் சொந்தக் கற்பனையாகவே இருக்க வேண்டும்.

**தேர்ச்சி 3:0 : செய்முறை**

- செய்முறைப் பயிற்சியில் ஈடுபடுத்தும் போது, பாத அசைவுகளில் குறித்த தேர்ச்சி மட்டத்தை அடைந்த பின்பு தான் கை அசைவுகளுக்குரிய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

- பாடவேளை போதாதவிடத்து மேலதிக வகுப்புக்களை நடத்தி மாணவர்களைக் குறித்த மட்டத்தை அடையச் செய்ய வேண்டும்.

- முதலில் காற்செய்கையையும், பின்னர் கைச் செய்கையையும் தனித்தனியாகப் பயிற்சியளித்துத் தொகுத்தல் வேண்டும்.

**தேர்ச்சி 4:0 : அறிமுறை**

- அறிமுறைப் பாடப்பகுதிகள் அனைத்திற்கும் அன்றைய தினக் கற்றல் நடைபெற்று முடிந்த பின்பு மாணவர்கள் குறிப்பெடுத்திருத்தல் அவசியமாகும்.

- குறிப்புக்கள் திருத்தப்பட்டு மாணவர்கள் அவற்றை வீட்டில் விரிவான வசன ஆக்கம் செய்திருத்தல் வேண்டும்.

- அதன் பின்புதான் தேவையேற்படின் ஆசிரியர்கள் விரிவான விளக்கக் குறிப்பு வழங்க வேண்டும்.

- எக்காரணம் கொண்டும் ஆசிரியர் வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புக்கள் அப்படியே மாணவர்களுக்கு வழங்கப்படலாகாது.

- அத்துடன், ஆசிரியரின் தேடலும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- அடவுகள், உருப்படிகளுக்கான குறியீட்டு முறை விளக்கம் அளிக்கப்படும் போது, முதலில் ஒவ்வொரு தட்டிற்குமுரிய சொற்கட்டுக்களைக் கீழ்காட்டியவாறு எழுதப் பயிற்றுவிக்கவும்.
  **உ+ம் தா தெய் தெய்த அடவு**

**தேர்ச்சி 5.0 : கலாசாரப் பின்னணி**

- அறிமுறைப் பாடப்பகுதிக்குரிய கற்பித்தல் நுட்பங்களை இதற்கும் பயன்படுத்தலாம்.
- ஆசிரியரின் தேடலுடன் மாணவர்களின் தேடல்களும் இணைக்கப்பட்டு ஒப்படை மூலம் விடயங்களை இற்றைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

உ-ம் : ஆலயங்களில் நடனக்கலை என்னும் தேர்ச்சி மட்டத்தில் ஆலயங்களில் தற்போது இடம்பெறும் நிகழ்வுகளை புதிதாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

## உள்ளடக்கம்

**பக்கம்**

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| கலைத்திட்டக்குழு | v |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | vi-vii |
| உள்ளடக்கம் | viii |
| அறிமுகம் | ix-x |
| • தேசிய இலக்குகள் | xi |
| • அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள் | xii-xiii |
| • பாடத் தேர்ச்சிகள் | xiv |
| பாடத்திட்டம் | xv-xxii |
| கற்றல் கற்பித்தல் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள் | |
| தவணை I | 01- 09 |
| தவணை II | 10 - 18 |
| தவணை III | 19- 29 |

# அறிமுகம்

க..பொ.த சாதாரண தரக் கல்வியை நிறைவு செய்து கொண்டு, உயர் நிலைக் கல்வியைக் கற்கவரும் மாணவர்களுக்குப் பொருத்தமானதாகப் புதிய பரத நாட்டியப் பாடத்திட்டம் இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய கல்வித் திட்டங்களும் புதிய எண்ணக்கருக்களும் இக்கலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உயர் தரத்திலும் இரசித்தல், ஆக்கத்திறன், செய்முறை, அறிமுறை, கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு புதிய சாகரத்தின் இரண்டாம் கலைத்திட்டமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

தற்கால உலகில் மாற்றமடையாத ஒன்று மாற்றம் ஆகும். அதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. எந்தவொரு கலைத்திட்ட மறுசீரமைப்பும் இரண்டு அம்சங்களில் மாற்றங்களைப் பிரேரிக்கின்றது.

(1) பாடச் சேர்க்கை - பாடக்கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்தல், பாடவிடயங்களை இற்றைப்படுத்தல்

(2) பாடவிடயங்களை மாணவரிடம் கொண்டு சேர்ப்பதற்காக முன்வைக்கப்படும் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை

மாணவர் மையக் கல்விக்கு முதலிடம் கொடுக்கின்ற இப்புதிய கலைத்திட்டமானது, மாணவர்களும் ஆசிரியரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், மாணவர்களின் தேடிக் கற்றலை ஊக்குவிப்பதற்குரிய செயற்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகவும், கற்றல் - கற்பித்தல் என்பவற்றை தெளிவாகப் புரிந்து தாமே விருப்பத்தோடு ஈடுபடுவதற்கு ஏற்றவகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல புதிய தேடல்களினூடாகக் கண்டறியப்ப்பட்ட விடயங்களை இப் புதிய கலைத்தித்தினூடாக எதிர்கால சமுதாயத்திற்கு வழங்கிப் புதிய சிந்தனைத் தூண்டலுக்கு வழியமைக்கின்றது..

**தற்காலக் கல்வி முறையின் மூன்று தூண்களாவன:-**

(1) அறிந்துள்ளவற்றைப் பேணிவருதல்.

(2) முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விடயங்களைக் கற்றல்.

(3) ஏற்கனவே கற்கப்பட்ட விடயத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பனவாகும்.

இச்செயற்பாடு ஏற்கனவே அறிந்துள்ளவற்றைத் தொடர்ந்தும் மாற்றியமைத்துப் புதுமைப்படுத்தும் புதிய சமூகமொன்றை உருவாக்கும். இதுவரை கண்டறியப்படாதவை தொடர்பாக, இளம் சந்ததியினரை வழிப்படுத்துவது இன்றியமையாதது ஆகும். தேடலில் ஈடுபட்டு, ஏற்கனவே அறிந்துள்ளவற்றை மாற்றியமைத்தும், இதுவரை கண்டறியப்படாதவற்றைத் தேடியறிவதற்கும் மாணவர்களைப் பழக்கப்படுத்துவது இப்புதிய கல்வித் திட்டத்தின் நோக்கமாகும். அத்துடன் இலங்கையின் ஏனைய சாஸ்திரிய நடன வடிவங்களைக் கற்பதற்கும், அதனூடாகச் சமூகப் புரிந்துணர்தலை ஏற்படுத்தும் நோக்குடனும் சில தேர்ச்சி மட்டங்கள் வடிவமைக்கப்பட்டிள்ளன.

வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான திறன்கள், ஆற்றல்களை அதாவது ஒன்றிணைந்த ஆளுமைக்கு இன்றியமையாத சிந்தனைத் திறன் (Thinking skill ), சமூகத் திறன் (Social skill ), சுயதிறன் (Personal skill ) ஆகியவற்றை விருத்தி செய்வதற்குரிய காலமாகப் பாடசாலைக் காலத்தில் வழங்கப்படத்தக்கவாறு தயாரிக்கப்பட்ட ஒரு பொதுவான கலைத்திட்டம் இதுவாகும்.

வந்தபின் செயற்படும் அணுகுமுறைக்குப் பதிலாக, வருமுன் செயற்படும் அணுகுமுறையைக் கைக்கொள்வது இன்றைய எதிர்காலச் சந்ததியினருக்கு அவசியமானதொன்றாகும். எனவே, நாளைய உலகை வெற்றி பெறுவதற்காகத் தேடலை முனைப்பாகக் கொண்ட வகையில், இப்புதிய கலைத்திட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்கால சமூகத்திற்குத் தேவையான ஆளுமையுடைய சமூகத்தை உருவாக்குவது இப்புதிய பாடத்திட்டத்தின் தாரக மந்திரமாகும்.

.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூகநீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப்பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்.

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியற் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. “கற்றலுக்குக் கற்றல்” தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச்செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை 2003)

# பாடத் தேர்ச்சிகள்

- பரத நாட்டியத்துடன் தொடர்பான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் ஊடாக அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.
- சிறந்த நடனக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.
- படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வார்.
- தேசிய, பன்னாட்டுக் கலைகளை அறிந்து மதிப்பளிப்பார்.
- அழகியல் நயப்புடையவராவார்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கை வளர்ப்பார்.
- பண்பாட்டின்பால் பற்றுறுதியையும், மரபைக் கையேற்கும் மனப்பாங்கையும் விருத்தி செய்வார்.
- தன்னாற்றலை இனங்கண்டு, கலை நிகழ்வுகளை ஆற்றுகைப்படுத்தும் திறனை விருத்தி செய்வார்.
- சிறந்த தொடர்பாடற் திறனை விருத்தி செய்வார்.
- தாமாக முன்வந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் திறனைப் பெறுவார்.
- இயற்கையை நயந்து வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- நவீன தொழினுட்ப சாதனங்களைக் கையாளும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வார்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குவார்.
- குழுவாக இயங்கும் பண்பை விருத்தி செய்வார்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடை வகைத் தொடர்புகைளப் பேணுவார்.
- சமூக அங்கீகாரம், புகழ் என்பவற்றைப் பெற்றுக்கொள்வார்.
- கலை நுணுக்கங்களை அறிந்து அவற்றை விவரிக்கும், விமர்சிக்கும் ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வார்.
- கலைத் தேடலின் ஊடாகப் புதிய முன்வைப்புகளுக்கு முயற்சிப்பார்.
- மூத்த கலைஞர்களுக்குக் கௌரவமளிக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்வார்.

## பாடத்திட்டம்
## தரம் 12

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 1 . 0 | இலங்கை இந்திய சாஸ்திரிய நடனங்களை நயப்பார். | 1.1 தென்னிந்திய சாஸ்திரிய நடனங்களை நயந்து மதிப்பிடுவார். | `• கதகளி<br>• குச்சிப்புடி<br>• மோகினியாட்டம் | • தென்னிந்திய சாஸ்திரிய நடனங்களை ஒப்பிடுவார்.<br>• அவற்றிற்கிடையேயான வேறுபாடுகளினைக் காண்பார்.<br>• ஆடல்களின் தனித்துவங்களை நயந்து சிறப்பம்சங்களை அறிந்துகொள்வார். | 08 |
| | | 1.2 வட இந்திய சாஸ்திரிய நடனங்களை நயந்து மதிப்பிடுவார். | • கதக்<br>• மணிப்புரி<br>• ஒடிசி | • வட இந்திய சாஸ்திரிய நடனங்களை ஒப்பீடு செய்வார்..<br>• அவற்றிற்கிடையேயான வேறுபாடுகளினைக் காண்பார்.<br>• சிறப்பம்சங்களை நயந்து விமர்சனங்களை முன்வைப்பார். | 08 |
| | | 1.3 இலங்கையின் தேசிய நடனத்தை நயந்து மதிப்பிடுவார். | • கண்டிய நடனம் | • சிறப்பம்சங்களை விபரிப்பார்.<br>• இந்திய சாஸ்திரிய நடனங்களுடனான தொடர்பினை ஒப்பிடுவார்.<br>• அவற்றிற்கிடையேயான வேறுபாடுகளை இனங்காண்பார். | 06 |

# பாடத்திட்டம்
## தரம் 12

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 2.0 | ஆக்கத்திறனை வெளிப்படுத்துவார். | 2.1 பாடல்களுக்கான அபிநயத்தினை ஆக்கி ஆற்றுகைப்படுத்துவார். | கொடுக்கப்படும் பாடல் அடிகளுக்கு சஞ்சாரி பாவம் அமைத்தல். | • பாடலுக்குரிய நேர்க் கைகள் இரண்டினை ஆக்கி அபிநயிப்பார்.<br>• பாடலுடன் சம்பந்தப்பட்ட கதைகளைச் சஞ்சாரி பாவமாக முன்வைப்பார். | 10 |
| | | | சிறிய கீர்த்தனைக்கு அபிநயம் அமைத்தல். | • கீர்த்தனையை உரிய முகபாவத்துடன் ஆற்றுகைப்படுத்துவார். | 10 |
| | | | அஷ்டவித நாயகிகள், நாயகர்களை அபிநயித்தல் | • அஷ்டவித நாயகிகளைக் கூறுவார்.<br>• அஷ்டவித நாயகிகளின் நாயகர்களின் குணாதிசயங்களை வெளிப்படுத்தும் சிறிய பாடல் வாக்கியங்களுக்கு அபிநயம் ஆக்கி அபிநயிப்பார்.<br>• அஷ்டவித நாயகிகளுக்குரிய, நாயகர்களுக்குரிய குணங்கள், பண்புகளை அபிநயத்தினால் வெளிப்படுத்துவார். | 10 |

# பாடத்திட்டம்
# தரம் 12

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 3 . 0 | பரத நாட்டியத்தின் பல்வேறு அம்சங்களை அபிநயிப்பார். | 3.1 அடவுகளைப் பஞ்சஜாதியில் அபிநயிப்பார். | • நாட்டடவு<br>• தாதெய்தெய்த<br>• குதித்து மெட்டடவு<br>• தெய்யா தெய்யி<br>• மண்டியடவு<br>• தத்தெய்தாம்<br>• தத்தெய் தாஹா<br>• தித்தெய்ந்த தாதெய்<br>• தெய்தெய் தத்தா<br>• தட்டு மெட்டடவு<br>• கர்த்தரீ அடவு<br>• உத்ஸங்க அடவு<br>• சறுக்கலடவு<br>• பஞ்சஜாதி ததிங்கிணதொம் | • அடவுகளைப் பஞ்சஜாதியில் மாற்றியமைக்கும் திறனை வெளிப்படுத்துவார்.<br>• அடவுகளைப் பஞ்சஜாதிகளில் அபிநயிப்பார்.<br>• அடவுகளை ஆடும்போது ஜாதி வேறுபாடுகளை இனங்காண்பார். | 34 |
| | | 3.2 நிருத்த, நிருத்திய உருப்படிகளை அபிநயிப்பார். | • மிஸ்ர அலாரிப்பு இராகம்-நாட்டை, தாளம்-மிஸ்ரசாபு<br>• கௌத்துவம்<br>• விநாயகர் கௌத்துவம் இராகம்-நாட்டை, தாளம்-சதுஸ்ரஏகம்<br>**அல்லது**<br>சண்முக கௌத்துவம் இராகம்-கௌளை, தாளம்-சதுஸ்ரஏகம்<br>• கீர்த்தனம் திருப்பரங்குன்றவேலா இராகம் - கிந்தோளம் தாளம் - ஆதி | • மிஸ்ர அலாரிப்பு, கௌத்துவம், கீர்த்தனம், திருவாசகம் ஆகியவற்றை அபிநயிப்பார்.<br>• அவற்றைத் தாளத்துடன் கொலுப்பிப்பார். | 58 |

**பாடத்திட்டம்**
**தரம் 12**

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | | **அல்லது**<br>விளையாட இது நேரமா.. இராகம் - சண்முகப்பிரியா<br>தாளம் - ஆதி<br><br>* திருவாசகம்<br>அம்மையே அப்பா<br>இராகம் - மோகனம், | | |
| | | 3.3 வர்ணத்தினை அபிநயித்துக் கொலுப்பிப்பார். | பதவர்ணம் (பூர்வாங்கம்)<br>• சகியே<br>இராகம் - ஆனந்த பைரவி, தாளம்-ஆதி<br>**அல்லது**<br>• சுவாமியை வரச் சொல்லடி<br>இராகம் - பூர்விகல்யாணி, தாளம்-ஆதி | • பதவர்ணத்தின் பூர்வாங்கப்பகுதியினை அபிநயிப்பார்<br>• அவற்றைக் கொலுப்பிப்பார். | 35 |
| | | 3.4 நடனத்திற்குரிய ஒப்பனைகளை மேற்கொள்வார். | • முக, தலை, உடை ஒப்பனை | • ஒப்பனைக்குரிய பொருட்களை இனங்காண்பார்.<br>• ஒப்பனைகளை மேற்கொள்வார். | 06 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 3.5 கற்ற உருப்படிகளை இசையுடன் பாடுவார். | • இசையுடன் பாடுவார்<br><br>* மிஸ்ர அலாரிப்பு<br>இராகம்-நாட்டை, தாளம்-மிஸ்ரசாபு<br>* கௌத்துவம்<br>கணபதி கௌத்துவம்<br>இராகம்-நாட்டை, தாளம்-சதுஸ்ரஏகம்<br>**அல்லது** சண்முக கௌத்துவம்<br>இராகம்-கௌளை, தாளம்-சதுஸ்ரஏகம்<br>* வர்ணம்<br>* கீர்த்தனம்<br>விளையாட இது நேரமா.. இராகம் - சண்முகப்பிரியா<br>தாளம் - ஆதி<br>**அல்லது**<br>திருப்பரங்குன்றவேலா<br>இராகம் - கிந்தோளம்<br>தாளம் - ஆதி<br><br>* திருவாசகம்<br>அம்மையே அப்பா<br>இராகம் - மோகனம், | மிஸ்ர அலாரிப்பு, கௌத்துவம், வர்ணம், கீர்த்தனம், ஆகியவற்றைத் தாளத்துடன் கொலுப்பித்தும் திருவாசகத்தை இசையுடனும் பாடுவார்.<br><br>• நான்குவித அபிநயங்களையும் பெயரிடுவார். | 06 |

# பாடத்திட்டம்
## தரம் 12

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 4 . 0 | நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார். | 4.1 அபிநயங்கள் பற்றி அறிந்துகொள்வார். | நான்குவித அபிநயங்கள் (விரிவான விளக்கம்) | • அவற்றின் விளக்கங்களை பொழிப்பாக்குவார். | 10 |
| | | 4.2 பரத நாட்டியத்திற்குத் தேவையான முக்கிய அம்சங்களைப் பட்டியற்படுத்துவார். | • 72 மேளகர்த்தா சக்கர விளக்கம்<br>• ரஸப்ரகரணம்<br>• பக்தி மார்க்கம்<br>• தாளதசப் பிராணன்கள்<br>• நாட்டிய நூல்கள்<br>- நாட்டிய சாஸ்திரம்<br>- அபிநய தர்ப்பணம் | • 72 மேளகர்த்தா ராகங்களின் விளக்கங்களை பொழிப்பாக்குவர்.<br>• மேளகர்த்தா ராகங்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• ரஸபேதங்களை அட்டவணைப் படுத்துவார்.<br>• பக்தி பாவங்களின் வேறுபாடு காண்பார்.<br>• தாள தசப்பிராணன்களைப் பெயரிடுவார்.<br>• அவற்றின் விளக்கங்களைப் பொழிப்பாக்குவார்.<br>• நாட்டிய நூல்களைப் பெயரிடுவார்.<br>• அவற்றின் உள்ளடக்கங்களை எடுத்துரைப்பார். | 28 |
| | | 4.3 கற்ற உருப்படிகளை இசைக்குறியீட்டுடன் எழுதுவார் | • இசைக் குறியீட்டுடன் எழுதுவார்.<br>• மிஸ்ர அலாரிப்பு<br>• கௌத்துவம்<br>• வர்ணம் | • மிஸ்ர அலாரிப்பு கௌத்துவம், வர்ணம் ஆகியவற்றை இசைக்குறியீட்டுடன் எழுதுவார். | 10 |

## பாடத்திட்டம்
## தரம் 12

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 5 . 0 | சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களை ஆராய்ந்தறிவார். | 5.1 இந்திய சாஸ்திரிய நடனங்களின் வரலாறுகளை விளங்கிக் கொள்வார். | • பரதநாட்டியம்<br>• கதகளி<br>• குச்சிபுடி<br>• மோகினியாட்டம்<br>• ஒடிசி<br>• மணிப்புரி<br>• கதக்<br>(தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி, மறுமலர்ச்சி, பக்க வாத்தியம், ஒப்பனை) | • சகல சாஸ்திரிய நடனங்களினதும் விடயங்களைப் பொழிப்பாக்குவார்.<br>• அவற்றின் பிரதேச வேறுபாடுகளைக் கூறுவார்.<br>• இந் நடனங்களின் வேறுபாடுகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• சாஸ்திரிய நடனங்களின்அமைப்பு முறை, பக்கவாத்தியம், ஆடை அணிகலன்கள், ஒப்பனை ஆகியவற்றினை இனங்காண்பார். | 22 |
| | | 5.2 இந்திய பரதக் கலைஞர்களின் கலைத் தொண்டுகளை விளங்கி மதிப்பளிப்பார். | • ஈ. கிருஸ்ணையர்<br>• பந்தனை நல்லூர் சபாரஞ்சிதம்<br>• ருக்மிணிதேவி அருண்டேல்<br>• தஞ்சாவூர் சுப்பராய நட்டுவனார்<br>• மைலாப்பூர் கௌரி அம்மா<br>• பாலசரஸ்வதி அம்மா<br>• அருணாசல நட்டுவனார்<br>• ஜகதாம்பாள் அம்மா | • பெரியார்களின் கலைப்பணிகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புக்களைக் குறிப்பிடுவார். | 18 |

## பாடத்திட்டம்

**தரம் 12**

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 5.3 பரத நடனத்தின் வரலாற்றுப் பின்னணிகளை விரிவாக விளங்கிக்கொள்வார். | • சங்க காலம்<br>• சங்கமருவிய காலம்<br>• பல்லவர் காலம்<br>• சோழர் காலம்<br>• விஜயநகர காலம்<br>• ஆங்கிலேயர். காலம்<br>• நாயக்கர் காலம்<br>• மறுமலர்ச்சிக் காலம்<br><br>• ஆலயங்களில் நடனக்கலை | • சங்க காலம், சங்கமருவிய காலம் ஆகியவற்றின் வரலாற்றுக் குறிப்புக்களையும்,சிறப்பம்சங்களையும் குறிப்பிடுவார்.<br>• பல்லவர், சோழர் காலங்களின் நடனக் கலையின் சிறப்பம்சங்களையும் ஆராய்ந்து முன்வைப்பார்.<br>• விஜயநகர, நாயக்கர் காலங்களையும் மறுமலர்ச்சிக் காலத்தையும் வகைபிரிப்பார்.<br><br>• ஆலயங்களில் சிறப்புடன் விளங்கிய நடனக்கலையைக் கட்டுரையாக்குவார். | 21 |

# தரம் 12

## தவணை 1

**தேர்ச்சி 1.0 :** இலங்கை இந்திய சாஸ்திரிய நடனங்களை நயப்பார்.

**தேர்ச்சி மட்டம் 1.1 :** தென்னிந்திய சாஸ்திரிய நடனங்களை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றற் பேறுகள் :**
- கதகளி, குச்சுப்புடி, மோகினியாட்டம் ஆகிய நடனங்களின் ஒருமைப்பாடான அம்சங்களை ரசித்து வெளிப்படுத்துவார்.
- அவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு கூறுவார்.
- சிறப்பம்சங்களை நயந்து ஆடல்களின் தனித்துவங்களை அறிந்துகொள்வார்.

**செயற்பாடு 1.1.1 :** கதகளி, குச்சிப்புடி, மோகினியாட்டம் ஆகிய சாஸ்திரிய நடனங்களை நயத்தல்.

**பாடவேளைகள் :** 08

**தர விருத்தி உள்ளீடுகள் :** ஒளிப்பதிவுக் கருவி, காணொளி, இறுவட்டு.

**அறிமுகம் :** தாம் பார்வையிட்ட கதகளி, குச்சிப்புடி, மோகினியாட்டம் ஆகியவற்றில் அவதானித்த சகல விடயங்களையும் முன்வைக்கும் ஆற்றலைப் பெற வேண்டும் என்பது கருத்திற்கொள்ளப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

- கதகளி, குச்சிப்புடி, மோகினியாட்டம் ஆகிய சாஸ்திரிய நடனங்களை ஒளிப்பதிவுக் கருவி மூலம் பார்வையிடச் செய்தல்.

- பார்வையிட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல். குறிப்பிட்ட சாஸ்திரிய நடனங்களிடையே பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் காணப்பட்ட ஒற்றுமை, வேற்றுமைகளை முன்வைத்தல்.
    - நடன அமைப்பு
    - ஆடை, ஆபரணம், ஒப்பனை
    - இசை, பக்கவாத்தியக் கருவிகள்.

**கணிப்பீடும்/மதிப்பீடும் :**

- கதகளி, குச்சிப்புடி, மோகினியாட்டம் ஆகிய சாஸ்திரிய நடனங்களை இனங்காண்பார்.
- அவற்றின் அமைப்பு பற்றிக் கூறுவார்.
- அவற்றின் ஆடை, ஆபரணங்கள் பற்றிக் குறிப்பிடுவார்.
- ஒப்பனையின் பொருத்தப்பாடு பற்றிக் கூறுவார்.
- இசை, பக்கவாத்தியக் கருவிகளைப் பற்றிக் குறிப்பிடுவார்.
- மேற்கூறிய சாஸ்திரிய நடனங்களிற்கிடையேயான ஒற்றுமை, வேற்றுமைகளை முன்வைப்பார்.

**தேர்ச்சி 2.0** : ஆக்கத்திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 2.1** : பாடல்களுக்கான அபிநயத்தினை ஆக்கி ஆற்றுகைப்படுத்துவார்.

**கற்றற்பேறுகள்** :
- ♦ பாடலுக்குரிய நேர்க்கைகளை அபிநயிப்பார்.
- ♦ பாடலுடன் தொடர்புடைய கதைகளைச் சஞ்சாரி பாவமாக முன்வைப்பார்.

**செயற்பாடு 2.1.1** : பாடலுக்கு அபிநயம் ஆக்குதல்.

**பாடவேளைகள்** : 10

**தர விருத்தி உள்ளீடுகள்** : பாடல் வரிகள் எழுதப்பட்ட அட்டை, தட்டுக்கழி, தட்டுப்பலகை.

**அறிமுகம்** : பாடல் வரிகளின் பொருள் உணர்ந்து தாமே அபிநயம் அமைக்கும் திறனைப் பெறவேண்டும் என்பது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு:**

- ♦ பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ♦ ஆசிரியர் பாடல் வரிகளைப் பாடிக்காட்டுதல்.
- ♦ பாடலின் கருத்தைக் கூறித் தாமாகவே அபிநயம் செய்வதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- ♦ ஆசிரியர் அவதானித்துத் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் ஆலோசனை வழங்கி முழுமை பெறச் செய்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும்** :

- ♦ பாடல் வரிகளை இராகத்துடன் பாடிக்காட்டுவார்.
- ♦ பாடலின் கருத்தைக் கூறுவார்.
- ♦ தாமே ஆக்கிய பாடல்களுக்கான அபிநயத்தினை முன்வைப்பார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்தின் பல்வேறு அம்சங்களை அபிநயிப்பார்.

**தேர்ச்சி 3.1** : அடவுகளைப் பஞ்ச ஜாதியில் அபிநயிப்பார்.

**கற்றற்பேறு** :
- ♦ அடவுகளைப் பஞ்சஜாதியில் மாற்றியமைக்குந் திறனைப் பெறுவார்.
- ♦ பஞ்சஜாதிகளில் அபிநயிப்பார்.
- ♦ அடவுகளை ஆடும்போது ஜாதி வேறுபாடுகளை இனங்கண்டு கூறுவார்.

**செயற்பாடு 3.1.1** : அடவுகளைப் பஞ்ச ஜாதிகளில் ஆடுதல்.

**பாடவேளை** : 34

**தர உள்ளீடுகள்** : தட்டுக்கழி, தட்டுப்பலகை அடவுகளின் விபரங்கள் எழுதப்பட்ட அட்டை.

**அறிமுகம்** : அடவுகளை மூன்று காலங்களிலும் ஐந்து ஜாதிகளிலும் அபிநயிக்கக் கூடிய ஆற்றலைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ ஆடவேண்டிய அடவுகளின் விபரங்கள் அடங்கிய அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ♦ அடவுகளை சதுஸ்ரநடையில் ஆடுதல்.
- ♦ திஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் ஆகிய நடைகளில் திரிகாலங்களிலும் ஆடுதல.
- ♦ இவ்வாறே ஏனைய அடவுகளையும் ஆடுதல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

நாட்டடவு - ததிங்கிணதொம் வரையிலான அடவுகளைப் பஞ்சஜாதிகளிலும் ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி 4.0 :** நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** அபிநயங்கள் பற்றி அறிந்து கொள்வார்.

**கற்றற் பேறுகள் :**

- ♦ அபிநயத்தின் வரைவிலக்கணத்தை விரிவாக்குவார்.
- ♦ நான்குவித அபிநயங்களையும் அவற்றின் உட்பிரிவுகளையும் பெயரிடுவார்.
- ♦ அவற்றின் விளக்கங்களைப் பொழிப்பாக்குவார்.

**செயற்பாடு 4.1.1 :** நான்குவித அபிநயங்களைக் குறிப்பிடுதல்.

**பாடவேளைகள் :** 10

**தரவிருத்தி உள்ளீடுகள் :** அபிநயங்களின் விபரங்கள் எழுதப்பட்ட அட்டை.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ அபிநயத்தின் விளக்க அட்டவணையைக் காட்சிப்படுத்தல்.
- ♦ விரிவான விளக்கங்களை வரைவிலக்கணப்படுத்துதல்.
- ♦ நான்குவித அபிநயங்களின் விரிவான விளக்கத்தையளித்து மாணவரைக் குறிப்பெடுக்கப் பணித்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

- ♦ அபிநயத்தின் விரிவான விளக்கத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- ♦ நான்குவித அபிநயங்களையும் அதன் பிரிவுகளையும் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 4.0 :** நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** பரதநாட்டியத்திற்குத் தேவையான முக்கிய அம்சங்களைப் பட்டியற்படுத்துவார்.

**கற்றற் பேறுகள் :**

- ♦ பக்தி மார்க்கம் பற்றி அறிந்து அபிநயிப்பார்.
- ♦ அவற்றினை வரைவிலக்கணப்படுத்துவார்.
- ♦ அவை இடம்பெறும் உருப்படிகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- ♦ இரு பாவங்களின் வேறுபாடுகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.2.3 :** பக்தி மார்க்கம். அறிதல்.

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :** வரைவிலக்கணங்கள் எழுதப்பட்ட அட்டை.

**அறிமுகம் :** பக்தி மார்க்கம் வரைவிலக்கணப்படுத்தவும் இனங்கண்டு அபிநயிக்கவும் திறன் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ பக்தி மார்க்கம் இடம்பெறும் உருப்படியின் ஒரு பகுதியை ஆசிரியர் அபிநயித்துக் காட்டல்.
- ♦ இரு பாவங்களுக்குமிடையிலான வேறுபாடுகளை இனங்காணச் செய்தல்.
- ♦ விளக்கம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ வேறுபாடுகளை அறிந்து மாணவர் அபிநயிக்கத் தூண்டுதல்.
- ♦ விளக்கங்களைக் குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

- ♦ பக்தி மார்க்கம் இனங்கண்டு கூறுவார்.
- ♦ அவற்றினை அபிநயித்துக் காட்டுவார்.
- . . . . ♦ அவற்றை வரைவிலக்கணப்படுத்துவார்.

**தேர்ச்சி 4.0** : நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2.4** : பரத நாட்டியத்திற்குத் தேவையான முக்கிய அம்சங்களைப் பட்டியற்படுத்துவார்.

**கற்றற் பேறுகள்** :
- ♦ தாளதசப் பிராணன்களைப் பெயரிடுவார்.
- ♦ அவற்றின் விளக்கங்களைப் பொழிப்பாக்குவார்.

**செயற்பாடு** : தாளதசப் பிராணன்களைப் பற்றி அறிதல்.

**பாடவேளைகள்** : 04

**தரவிருத்தி உள்ளீடுகள்** : தாளதசப் பிராணன்களின் விபரங்கள் அடங்கிய அட்டை.

**அறிமுகம்** : தாளதசப் பிராணன்கனை வரைவிலக்கணப்படுத்தும் திறனைப்பெற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ விபரங்களடங்கிய அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ பத்துப் பிராணன்களையும் கூறி மாணவர்களைக் கூறச் செய்தல்.
- ♦ வரைவிலக்கணங்களை மாணவர் குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும்** :

- ♦ பத்துப் பிராணன்களைப் பட்டியற்படுத்துவார்.
- ♦ அவற்றின் வரைவிலக்கணங்களைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 4.0 :** நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2. :** பரத நாட்டியத்திற்குத் தேவையான முக்கிய அம்சங்களைப் பட்டியற்படுத்துவார்.

**கற்றற் பேறுகள் :**
- ♦ குறித்த நாட்டிய நூல்களைப் பெயரிடுவார்.
- ♦ அவற்றின் உள்ளடக்கங்களை எடுத்துரைப்பார்.

**செயற்பாடு 4.2.5 :** அபிநயதர்ப்பணம், நாட்டியசாஸ்திரம் ஆகிய நூல்களின் விபரங்களை மேலோட்டமாக அறிந்து குறிப்பிடுதல்.

**பாடவேளைகள் :** 08

**தரவிருத்தி உள்ளீடுகள் :** அபிநயதர்ப்பணம், நாட்டியசாஸ்திரம் ஆகியனபற்றி எழுதப்பட்ட அட்டை.

**அறிமுகம் :** அபிநயதர்ப்பணம், நாட்டியசாஸ்திரம் ஆகிய நூல்களின் பெயர்களை அறியும் திறனையும் அவற்றின் விபரங்களை ஓரளவு அறிந்திருக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ நாட்டிய நூல்களின் பெயர்களைக் கூறுதல்
- ♦ அவற்றின் உள்ளடக்கங்களைக் காட்சிப்படுத்திக் குறிப்பெடுக்கச் செய்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

- ♦ நாட்டிய நூல்களின் பெயர்களைக் கூறுவார்.
- ♦ அவற்றின் உள்ளடக்கங்களைக் குறிப்பிடுவார்.
- ♦ நாட்டிய நூல்களை உருவாக்கியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி** **5.0**: சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களை உய்த்தறிவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : இந்திய சாஸ்திரிய நடனங்களின் வரலாறுகளை வேறுபிரித்தறிவார்.

**கற்றற் பேறுகள்** : அவற்றின் வேறுபாடுகளைக் குறிப்பிடுவார்.
மாநில வேறுபாடுகளை இனங்காண்பார். அமைப்பு, பக்க வாத்தியம், ஆடை ஆபரணம், ஒப்பனை ஆகியவற்றில் வேறுபாடு காண்பார்.

**செயற்பாடு 5.1.1** : சாஸ்திரிய நடனங்களை முழுமையாக அறிதல்.

**பாடவேளைகள்** : 22

**தரவிருத்தி உள்ளீடுகள்** : சகல சாஸ்திரிய நடனங்களினதும் படங்கள், சுருக்கக் குறிப்புகள் எழுதப்பட்ட அட்டைகள். கிடைக்கக்கூடிய ஆடை, ஆபரணங்கள், ஒப்பனைப் பொருள்கள்.

**அறிமுகம்** : **சகல சாஸ்திரிய நடனங்களின் முழுமையான விவரங்களையும்** அறிந்திருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ சாஸ்திரிய நடனங்களை மாநில ரீதியாகப் பிரித்துப் படங்களைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ பார்வையிட்ட படங்களில் ஆடை, ஆபரண, ஒப்பனை, நடனத் தோற்றங்களை அடிப்படையாக வைத்தும் ஏற்கனவே நயத்தலில் பெற்ற அனுபவங்களினடிப்படையிலும் நடனங்களை வேறுபிரித்தறியும் வண்ணம் வழிகாட்டலை மேற்கொள்ளல்.
- ♦ சுருக்கக் குறிப்புக்களின் உதவியுடன் ஒவ்வொரு நடனத்தைப் பற்றியும் முழுமையான விளக்கத்தினை அளித்தல்.
- ♦ மாணவர்கள் குறிப்பெடுக்க நேரம் அளித்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும்** :

- ♦ சாஸ்திரிய நடனங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- ♦ அந் நடனங்கள் நிலவும் மாநிலத்தைக் குறிப்பிடுவார்.
- ♦ ஒவ்வொன்றினதும் தோற்றம், ஆடல் அமைப்பு, பக்கவாத்தியங்களின் பயன்பாடு, ஆடை, ஆபரணம், ஒப்பனை ஆகியவற்றினைக் குறிப்பிடுவார்.
- ♦ குறிப்பிட்ட நடனங்களிற்கிடையிற் காணப்படும் வேறுபாடுகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.

# தவணை 2

**தேர்ச்சி 1.0** : இலங்கை, இந்திய சாஸ்திரிய நடனங்களை நயப்பார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : வட இந்திய சாஸ்திரிய நடனங்களை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றல் பேறுகள்** :
- ♦ வட இந்திய சாஸ்திரிய நடனங்களை ஒப்பீடு செய்வார்.
- ♦ அவற்றிற்கிடையேயான வேறுபாடுகளைக் காண்பார்.
- ♦ சிறப்பம்சங்களை நயந்து விமர்சனங்களை முன்வைப்பார்.

**செயற்பாடு 1.2.1** : கதக், மணிப்புரி, ஒடிசி ஆகிய சாஸ்திரிய நடனங்களை நயத்தல்.

**பாடவேளைகள்** : 08

**தரவிருத்தி உள்ளீடுகள்** : காணொளி இறுவட்டு.

**அறிமுகம்** : தாம் பார்வையிட்ட கதக், மணிப்புரி, ஒடிசி ஆகிய சாஸ்திரிய நடனங்களில் தாம் அவதானித்த சகல விடயங்களையும் பற்றி விமர்சிக்கும் ஆற்றலைப்பெறவேண்டும் என்பது கருத்திற்கொள்ளப்படுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு** :

- ♦ கதக், மணிப்புரி, ஒடிசி ஆகிய சாஸ்திரிய நடனங்களைக் காணொளி இறுவட்டின் மூலம் பார்வையிடச் செய்தல்.
- ♦ பார்வையிட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- ♦ குறிப்பிட்ட சாஸ்திரிய நடனங்களிடையே பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் காணப்பட்ட ஒற்றுமை, வேற்றுமைகளை முன்வைத்தல்.
  - ♦ நடன அமைப்பு
  - ♦ ஆடை, ஆபரணம், ஒப்பனை
  - ♦ இசை, பக்கவாத்தியக் கருவிகள்

**கணிப்பீடும் / மதிப்பீடும்** :

- ♦ கதக், மணிப்புரி, ஒடிசி ஆகிய சாஸ்திரிய நடனங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- ♦ அவற்றின் அமைப்புப் பற்றிக் கூறுவார்.
- ♦ அவற்றின் ஆடை, ஆபரணங்கள் பற்றிக் குறிப்பிடுவார்.
- ♦ ஒப்பனையின் பொருத்தப்பாடு பற்றிக் கூறுவார்.
- ♦ இசை. பக்கவாத்தியக் கருவிகள் பற்றிக் குறிப்பிடுவார்.
- ♦ மேற்கூறிய சாஸ்திரிய நடனங்களிற்கிடையேயான ஒற்றுமை, வேற்றுமைகளை முன்வைப்பார்.

**தேர்ச்சி** **2.0** : ஆக்கத்திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **2.2** : பாடல்களுக்கான அபிநயத்தினை ஆக்கி ஆற்றுகைப்படுத்துவார்.

**கற்றற் பேறு** : கீர்த்தனையை உரிய முகபாவத்துடன் ஆற்றுகைப்படுத்துவார்.

**செயற்பாடு** **2.2.1** : சிறிய கீர்த்தனைக்கு அபிநயம் அமைத்தல்.

**பாடவேளைகள்** : 10

**தரவிருத்தி உள்ளீடுகள்** : பாடல் வரிகள் எழுதப்பட்ட அட்டை, தட்டுக்கழி, தட்டுப் பலகை.

**அறிமுகம்** : கீர்த்தனையின் பொருள் உணர்ந்து, தாமே அபிநயம் அமைக்கும் திறனைப் பெறவேண்டும் என்பது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- கீர்த்தனை எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- கீர்த்தனையை ஆசிரியர் பாடிக் காட்டுதல்.
- கருத்தினைக் கூறித் தாமாகவே அபிநயம் செய்வதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- ஆசிரியர் அவதானித்துத் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் ஆலோசனை வழங்கி, முழுமை பெறச் செய்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும்** :

- கீர்த்தனையை இராகத்துடன் பாடிக் காட்டுவார்.
- கீர்த்தனையின் கருத்தைக் கூறுவார்.
- பாடலின் கருத்திற்கேற்ப மாணவர்கள் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்தின் பல்வேறு அம்சங்களை அபிநயிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : நிருத்த, நிருத்திய உருப்படிகளை அபிநயிப்பார்.

**கற்றற் பேறுகள்** :
- ♦ மிஸ்ர அலாரிப்பினை அபிநயித்துக் காண்பிப்பார்.
- ♦ மிஸ்ர அலாரிப்பினைக் கொலுப்பிப்பார்.

**செயற்பாடு 3.2.1** : மிஸ்ர அலாரிப்பினை அபிநயித்தல், கொலுப்பித்தல்.

**பாடவேளைகள்** : 25

**தரவிருத்தி உள்ளீடுகள்** : மிஸ்ர அலாரிப்பு எழுதப்பட்ட அட்டை, காணொளி இறுவட்டு, தட்டுக்கழி, தட்டுப்பலகை.

**அறிமுகம்** : மிஸ்ர அலாரிப்பினைக் கொலுப்பிப்பதற்கும் அபிநயிப்பதற்கும் உரிய ஆற்றலைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ இறுவட்டினை அவதானிக்கச் செய்தல்.
- ♦ மிஸ்ர அலாரிப்பு எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ♦ அட்டமியிலிருந்து ஆரம்பித்துத் திஸ்ர அலாரிப்பிற்கும் மிஸ்ர அலாரிப்பிற்குமிடையிலான வேறுபாட்டினைச் சுட்டிக்காட்டிப் பகுதி, பகுதியாக அபிநயித்தல்.
- ♦ பூர்வாங்கத்தை முழுமையாக அபிநயித்தல்.
- ♦ மண்டியடவிலிருந்து ஆரம்பித்துப் படிப்படியாக உத்தராங்கப் பகுதியை அபிநயித்து நிறைவுசெய்தல்.
- ♦ மிஸ்ர அலாரிப்பு எழுதப்பட்ட அட்டையின் உதவியுடன் கொலுப்பித்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும்** :

- ♦ மிஸ்ர அலாரிப்பினை முழுமையாக அபிநயித்துக் காட்டுவார்.
- ♦ மிஸ்ர அலாரிப்பினைக் கொலுப்பிப்பார்.

**தேர்ச்சி 3.0** : பரதநாட்டியத்தின் பல்வேறு அம்சங்களை அபிநயிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : நிருத்த, நிருத்திய உருப்படிகளை அபிநயிப்பார்.

**கற்றற் பேறுகள்** :
- ♦ கௌத்துவத்தினை அபிநயிப்பார்.
- ♦ கௌத்துவத்தினைக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.2** : கௌத்துவத்தினை அபிநயித்துக் கொலுப்பித்தல்

**பாடவேளைகள்** : 12

**தரவிருத்தி உள்ளீடுகள்** : கௌத்துவம் எழுதப்பட்ட அட்டை, காணொளி, இறுவட்டு.

**அறிமுகம்** : கௌத்துவத்தின் முழு விபரங்களை அறிந்து அபிநயித்துக் கொலுப்பிக்கும் ஆற்றலைப் பெறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ காணொளி மூலம் கௌத்துவத்தைப் பார்வையிடச் செய்தல்.
- ♦ கௌத்துவம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ♦ முழுமையாகப் பார்வையிட்ட பின்னர் பகுதி, பகுதியாகக் காண்பித்தலும் ஆசிரியர் அபிநயித்துக் காட்டுதலும்.
- ♦ இறுவட்டின் உதவியுடனும் ஆசிரியரின் வழிகாட்டலுடனும் மாணவர் பின்பற்றி அபிநயித்து நிறைவு செய்தல்.
- ♦ கௌத்துவம் எழுதப்பட்ட அட்டையினைப் பார்வையிட்டவாறு கொலுப்பித்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

- ♦ கௌத்துவத்தினை இராக, தாளம், இயற்றியவர், நடன அமைப்பு ஆகிய விபரங்களை அறிந்து குறிப்பிடுவார்.
- ♦ கௌத்துவத்தினைக் கொலுப்பிப்பார்.
- ♦ கௌத்துவத்தினை அபிநயிப்பார்.

தேர்ச்சி 4.0 : நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும்

**தேர்ச்சி** **3.0** : நாட்டியத்தின் பல்வேறு அம்சங்களை அபிநயிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** **3.2** : நிருத்த, நிருத்திய உருப்படிகளை அபிநயிப்பார்.

**கற்றற் பேறுகள்** :
- கீர்த்தனையின் அபிநயத்தினை முன்வைப்பார்.
- கீர்த்தனையைக் கொலுப்பிப்பார்.

**செயற்பாடு** **3.2.3** : கீர்த்தனையை அபிநயித்தல்.

**பாடவேளைகள்** : 11

**தரவிருத்தி உள்ளீடுகள்** : ஒளிப்பதிவுக் கருவி, இறுவட்டு, பாடல் எழுதப்பட்ட அட்டை.

**அறிமுகம்** : கீர்த்தனையை உரிய முறையில் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவதற்கும் கொலுப்பித்துக் காட்டுவதற்குமுரிய ஆற்றலைப் பெறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- ஒளிப்பதிவுக் கருவி மூலம் கௌத்துவத்தைப் பார்வையிடச் செய்தல்.
- கீர்த்தனை எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- முழுமையாகப் பார்வையிட்ட பின்னர் பகுதி, பகுதியாகப் போட்டுக் காண்பித்தலும் ஆசிரியர் அபிநயித்துக் காட்டலும்.
- இறுவட்டின் உதவியுடனும் ஆசிரியரின் வழிகாட்டலுடனும் மாணவர் பின்பற்றி அபிநயித்து நிறைவு செய்தல்.
- கீர்த்தனை எழுதப்பட்ட அட்டையினைப் பார்வையிட்டவாறு கொலுப்பித்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும்** :

- கீர்த்தனையின் இராக, தாளம், இயற்றியவர், நடன அமைப்பு ஆகிய விபரங்களை அறிந்து குறிப்பிடுவார்.
- கீர்த்தனையைக் கொலுப்பிப்பார்.
- கீர்த்தனையை அபிநயிப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0** | : | நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **4.2** | : | பரத நாட்டியத்திற்குத் தேவையான முக்கிய அம்சங்களைப் பட்டியற்படுத்துவார். |
| **கற்றற் பேறுகள்** | | : | ♦ 72 மேளகர்த்தா சக்கரத்தின் அமைப்பின் விளக்கத்தினைப் பெற்றுக்கொள்வார். |
| **செயற்பாடு** | **4.2.1** | : | 72 மேளகர்த்தா சக்கரம் பற்றி அறிவார். |
| **பாடவேளைகள்** | | : | 06 |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | | : | 72 மேளகர்த்தா சக்கரங்கள் ஆகியன விபரமாக எழுதப்பட்ட அட்டை. |
| **அறிமுகம்** | | : | 72 மேளகர்த்தா சக்கரங்களைப் பட்டியற்படுத்தும் திறனைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. |

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ மேளகர்த்தாக்கள் என்பதன் விளக்கத்தைக் கூறுதல்.
- ♦ சக்கரங்களின் பெயர்களைக் கூறிக் கலந்துரையாடுதல்.
- ♦ விளக்கப்பட அட்டையைக் காட்சிப்படுத்தி சக்கரங்கள் இடம்பெறும் ஒழுங்கைக் கூறுதல்.
- ♦ ரிஸபம், காந்தாரம் ஆகியன சக்கரத்திற்குச் சக்கரமும் தைவதம், நிஷாதம் ஆகியன இராகமும், சுத்த மத்திமம், பிரதி மத்திமம் ஆகியன பூர்வாங்க, உத்தராங்கத்திற்கு மாறுவதையும் அட்டையில் சுட்டிக்காட்டி விளக்குதல்.
- ♦ ஒவ்வொரு சக்கரமாகக் காட்டி விளக்கியதைக் குறிப்பெடுக்கப் பணித்தல்.
- ♦ 12 சக்கரங்களையும் குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் /மதிப்பீடும் :**

- ♦ பன்னிரு சக்கரங்களைக் குறிப்பிடுவார்.
- ♦ பன்னிரு சக்கரங்களையும் மனனம் செய்து ஒப்புவிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** **4.3** : கற்ற உருப்படிகளை இசைக் குறியீட்டுடன் எழுதுவார்.

**கற்றற் பேறுகள்** :

- ♦ மிஸ்ர அலாரிப்பு, கௌத்துவம், வர்ணம் ஆகியவற்றைத், தாள இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.
- ♦ மேற்கூறிய உருப்படிகளைக் கொலுப்பிப்பார்.

**செயற்பாடு** **4.3.1** : கற்ற உருப்படிகளைக் கொலுப்பித்து இசைக்குறியீட்டுடன் எழுதுதல்.

**பாடவேளைகள்** : 10

**தரவிருத்தி உள்ளீடுகள்** : உருப்படிகள் இசைக்குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டைகள்

(மிஸ்ர அலாரிப்புக் குறியீடுகளுடன் எழுதப்பட்ட அட்டை, கௌத்துவம் எழுதப்பட்ட அட்டை, வர்ணத்தின் தீர்மானங்கள் எழுதப்பட்ட அட்டைகள், முத்தாயிஸ்வரம், சரணஸ்வரம் ஆகியவற்றின் கோர்வைகள் எழுதப்பட்ட அட்டைகள்)

**அறிமுகம்** : இசைக் குறியீட்டுடன் உருப்படிகளை எழுதுவதற்குரிய திறனைப் பெறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

- ♦ ஒவ்வொரு உருப்படியையும் தாளத்துடன் கொலுப்பித்தல்.
- ♦ அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ மாத்திரைக் கணக்குகளுடன் எழுதுதல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும்** :

- ♦ உருப்படிகளைக் கொலுப்பித்துக் கூறுவார்.
- ♦ இசைக் குறியீட்டுடன் எழுதுவார்.

**தேர்ச்சி 5.0** : சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களை உய்த்தறிவார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : இந்திய பரதக் கலைஞர்களின் கலைத் தொண்டுகளை விளங்கி மதிப்பளிப்பார்.

**கற்றற் பேறுகள்** :
- ♦ ஈ.கிருஸ்ணையர், பந்தணை நல்லூர் சபாரஞ்சிதம், ருக்மணிதேவி அருண்டேல், தஞ்சாவூர் சுப்பராய நட்டுவனார், மயிலாப்பூர் கௌரி அம்மா, பாலசரஸ்வதி அம்மா, அருணாசல நட்டுவனார் ஆகிய பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை அறிந்து குறிப்பிடுவார்.
- ♦ கலைப் பணிகளைப் பட்டியற்படுத்துவார்.

**செயற்பாடு 5.2.1** : பெரியார்களின் கலைத்தொண்டு, வாழ்க்கைக்குறிப்புகளை அறிதல்.

**பாடவேளைகள்** : 18

**தரவிருத்தி உள்ளீடுகள்** : பெரியார்களின் படங்கள், சுருக்கக் குறிப்புகள்.

**அறிமுகம்** : பெயர் குறிப்பிட்ட பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும் கலைத்தொண்டினையும் அறிந்து மதிப்பளிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ பெயர் குறித்த பெரியார்களின் படங்களைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ பெரியார் ஒவ்வொருவரினதும் வாழ்க்கைக் குறிப்புகளைச் சுருக்கக் குறிப்பெடுக்கச் செய்தல்.
- ♦ அன்னார்களின் கலைத்தொண்டினையும் அவ்வாறே குறிப்பெடுக்கப் பணித்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

- ♦ பெரியார்களின் படங்களை இனங்கண்டு கூறுவார்.
- ♦ பெரியோரின் வாழ்க்கைச் சரிதம், கலைத்தொண்டு ஆகியவற்றைக் கட்டுரையாக்குவார்.

# தவணை 3

**தேர்ச்சி 1.0** : இலங்கை, இந்திய சாஸ்திரிய நடனங்களை நயப்பார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : இலங்கையின் தேசிய நடனத்தை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றற் பேறுகள்** :
- ♦ கண்டிய நடனத்தின் சிறப்பம்சங்களை அங்கீகரிப்பார்.
- ♦ ஏனைய சாஸ்திரிய நடனங்களுடனான தொடர்பினை ஒப்பிட்டுக் கருத்துக்களை முன்வைப்பார்.
- ♦ அவற்றிற்கிடையேயான வேறுபாடுகளைக் கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 1.3.1** : கண்டிய நடனத்தை நயந்து விமர்சித்தல்.

**பாடவேளைகள்** : 06

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இறுவட்டு, காணொளிக் கருவி.

**அறிமுகம்** : தாம் பார்வையிட்ட கண்டிய நடனத்தில் அவதானித்த சகல விடயங்களையும் பற்றி அறியும் ஆற்றலைப் பெறவேண்டும் என்பது கருத்திற் கொள்ளப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ கண்டிய நடனத்தைக் காணொளிக் கருவி மூலம் பார்வையிடச் செய்தல்.
- ♦ பார்வையிட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- ♦ பார்வையிட்ட கண்டிய நடனத்தின் சிறப்பம்சங்களை முன்வைத்தல்.
- ♦ இந் நடனத்திற்கும் ஏனைய சாஸ்திரிய நடனங்களிற்குமிடையே பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை முன்வைத்தல்.
    - ♦ நடன அமைப்பு
    - ♦ ஆடை, ஆபரணம், ஒப்பனை
    - ♦ இசை, பக்க வாத்தியக் கருவிகள்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

- ♦ கண்டிய நடனத்தை இனங்கண்டு கூறுவார்.
- ♦ அதன் அமைப்புப் பற்றிக் கூறுவார்.
- ♦ அவற்றின் ஆடை, ஆபரணங்கள் பற்றிக் குறிப்பிடுவார்.
- ♦ ஒப்பனையின் பொருத்தப்பாடு பற்றிக் குறிப்பிடுவார்.
- ♦ இசை, பக்கவாத்தியக் கருவிகளைப் பற்றிக் குறிப்பிடுவார்.
- ♦ மேற்கூறிய நடனத்திற்கும் ஏனைய சாஸ்திரிய நடனங்களிற்குமிடையேயான ஒற்றுமை, வேற்றுமைகளை முன்வைப்பார்.

**தேர்ச்சி 2.0** : ஆக்கத்திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : பாடல்களுக்கான அபிநயத்தினை ஆக்கி ஆற்றுகைப்படுத்துவார்.

**கற்றற் பேறுகள்** :
- ♦ அஷ்டவித நாயகிகளைக் கூறுவார்.
- ♦ . நாயகர்களைக் கூறுவார்.
- ♦ அஷ்டவிதநாயகிகளின் குணாதிசயங்களை வெளிப்படுத்தும் சிறிய பாடல் வாக்கியங்களுக்கு அபிநயம் ஆக்கி அபிநயிப்பார்.
- ♦ அஷ்டவித நாயகிகளுக்குரிய குணங்கள், பண்புகள், நடத்தைகளைத் தகுந்த அபிநயத்தினால் வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 2.3.1:** அஷ்டவித நாயகிகளை அபிநயித்தல்.
நாயகர்களை அபிநயித்தல்.

**பாடவேளைகள்** : 10

**தரவிருத்தி உள்ளீடுகள்:** அஷ்டவித நாயகிகளின். நாயகர்களை படங்கள், குணாம்ச அட்டவணை. அஷ்டவித. நாயகிகளுக்குரிய பாடல் வரிகள் எழுதப்பட்ட அட்டைகள், தட்டுக்கழி, தட்டுப்பலகை.

**அறிமுகம்** : அஷ்டவித நாயகிகளுக்குரிய நாயகர்குணாம்சங்களை உணர்ந்து . அபிநயம் அமைக்கும் திறனைப் பெறவேண்டும் என்பது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கின்றது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- ♦ அஷ்டவித நாயகிகளின் படங்களைக் காட்சிப்படுத்தல்.
- ♦ நாயகர்களின். படங்களைக் காட்சிப்படுத்தல்.
- ♦ குணாம்ச அட்டவணையைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ காட்சிப்படுத்தியவை தொடர்பான விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்
- ♦ நாயகி நாயகர்களுடன் சம்பந்தமான பாடல் வரிகளைக் காட்சிப்படுத்தல்.
- ♦ அபிநயம் அமைப்பதற்குரிய ஆலோசனைகளை வழங்கி அபிநயிக்கத் தூண்டுதல்.
- ♦ நடத்தை சார்பான வேற்றுமைகளை உணர்ந்து அபிநயிக்க வழிகாட்டுதல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

- ♦ . அஷ்டவித நாயகிகளின். நாயகர்களின் நடத்தை, குணாம்சங்கள், நடை, . உடை,பாவனைகளை வெளிப்படுத்துவார்.
- ♦ பாடல் வரிகளுக்குப் பொருத்தமாக அபிநயித்துக் காட்டுவார்.
- ♦ எட்டுவிதமான அபிநய வேறுபாடுகளைக் காண்பிப்பார்.
- ♦ நாயகர்களின் அபிநய வேறுபாடுகளைக் காண்பிப்பார்

**தேர்ச்சி 3.0** : பரதநாட்டியத்தின் பல்வேறு அம்சங்களை அபிநயிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : நிருத்த, நிருத்திய உருப்படிகளை அபிநயிப்பார்.

**கற்றற் பேறுகள்** : ♦ திருவாசகத்தினை அபிநயித்துக் கொலுப்பிப்பார்.

**செயற்பாடு 3.2.4** : திருவாசகத்தினை அபிநயிப்பார்.

**பாடவேளைகள்** : 10

**தரவிருத்தி உள்ளீடுகள்** : காணொளிக் கருவி, இறுவட்டு, திருவாசகம் எழுதப்பட்ட அட்டை.

**அறிமுகம்** : திருவாசகத்தை உரிய முறையில் அபிநயித்துக் கொலுப்பித்துக் காட்டுவதற்குரிய ஆற்றலைப் பெறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- காணொளிக் கருவி மூலம் திருவாசகத்தைப் பார்வையிடச் செய்தல்.
- திருவாசகம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- முழுமையாகப் பார்வையிட்ட பின்னர் பகுதி, பகுதியாகப் போட்டுக் காண்பித்தலும் ஆசிரியர் அபிநயித்துக் காட்டலும்.
- இறுவட்டின் உதவியுடனும் ஆசிரியரின் வழிகாட்டலுடனும் மாணவர் பின்பற்றி அபிநயித்து நிறைவு செய்தல்.
- திருவாசகம் எழுதப்பட்ட அட்டையினைப் பார்வையிட்டவாறு கொலுப்பித்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும்** :

- திருவாசகத்தினை இராக, தாளம், இயற்றியவர், நடன அமைப்பு ஆகிய விவரங்களை அறிந்து குறிப்பிடுவார்.
- திருவாசகத்தினைக் கொலுப்பிப்பார்.

**தேர்ச்சி 3.0** : பரதநாட்டியத்தின் பல்வேறு அம்சங்களை அபிநயிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : வர்ணத்தினை அபிநயித்துக் கொலுப்பிப்பார்.

**கற்றற் பேறுகள்** :
- ♦ பதவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதீயனை அபிநயிப்பார்.
- ♦ அவற்றைக் கொலுப்பிப்பார்.

**செயற்பாடு 3.3.1** : பதவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை அபிநயித்துக் கொலுப்பித்தல்.

**பாடவேளைகள்** : 35

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இறுவட்டு, ஒளிப்பதிவுக் கருவி, பதவர்ணம் எழுதப்பட்ட அட்டை, தீர்மானங்கள் எழுதப்பட்ட அட்டை.

**அறிமுகம்** : பதவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை முழுமையாக அபிநயித்துக் கொலுப்பிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- ♦ ஒளிப்பதிவுக் கருவி மூலம் பதவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியினை முழுமையாகப் பார்வையிடச் செய்தல்.
- ♦ முதலில் தீர்மானத்தினைத் திரும்பவும் பார்வையிடச் செய்தல்.
- ♦ ஆசிரியர் அபிநயித்துக் காண்பித்தல்.
- ♦ தொடர்ந்து ஒவ்வொரு தீர்மானமாக அபிநயித்து மாணவரைப் பின்பற்றி அபிநயம் செய்தல்.
- ♦ அபிநயக் கைகளையும் அவ்வாறே அபிநயம் செய்து நிறைவு செய்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும்** :

- ♦ பதவர்ணத்தின் தீர்மானங்களை அபிநயிப்பார்
- ♦ அபிநயக் கைகளை அபிநயிப்பார்
- ♦ முத்தாயிஸ்வரத்தின் கோர்வைகளையும் அபிநயக் கைகளையும் அபிநயிப்பார்.
- ♦ அபிநயித்த பகுதிகளைக் கொலுப்பிப்பார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்தின் பல்வேறு அம்சங்களை அபிநயிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : நடனத்திற்குரிய ஒப்பனைகளை மேற்கொள்வார்.

**கற்றற் பேறுகள்** :
- ♦ ஒப்பனைக்குரிய பொருள்களை இனங்காண்பார்.
- ♦ தகுந்த ஒப்பனைகளை மேற்கொள்வார்.
- ♦ உடையலங்காரமான தாவணி, பாஸ்க், fan ஆகியவற்றை அமைக்கும் விதத்தையும் மேற்கொள்வார்.

**செயற்பாடு 3.4.1** : முகத்திற்குரிய ஒப்பனையையும் தலைக்குரிய அலங்காரத்தினையும் உடை அலங்காரத்தினையும் மேற்கொள்ளல்.

**பாடவேளைகள்** : 06

**தரவிருத்தி உள்ளீடுகள்** : முக ஒப்பனைக்குத் தேவையான Pane cake, Pink power, Eye liner, Lipstick ஆகியனவும், தலைக்குத் தேவையான உச்சிப்பட்டம், சிமிக்கி, மயிர்மாட்டி, சூரியபிறை, சந்திரபிறை, பூமாலை, மூக்கின் அணிகலன்களான மூக்குத்தி (பேசரி) பிலாக்கு, நத்து, தாவணி, பாஸ்க், fan முதலியனவும்

**அறிமுகம்** : ஒரு நடனப் பெண்ணிற்குத் தேவையான ஒப்பனை, அலங்காரங்களில் திறனைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ முக ஒப்பனைக்குரிய பொருள்களைக் காண்பித்து அவற்றின் பெயர்களைக் கூறுதல்.
- ♦ தலை அலங்காரத்திற்குத் தேவையான பொருள்களைக் காண்பித்தல்.
- ♦ உரிய இடங்களில் அப் பொருள்களை அணிவித்துப் பார்க்கச் செய்தல்.
- ♦ ஒரு மாணவருக்கு முக ஒப்பனை செய்து காண்பித்தல்.
- ♦ முக ஒப்பனையின் பின்னர் தலைக்கும், மூக்கிற்கும் அணியும் அணிகலன்களை அணிவித்துக் காட்டி முழுமையாக்குதல்.
- ♦ மாணவர் ஒருவரை இன்னொருவருக்கு ஒப்பனை செய்யப் பணித்துத் தகுந்த ஆலோசனைகளை ஆசிரியர் வழங்குதல்.
- ♦ தாவணி, பாஸ்க், fan போன்றவற்றை அமைக்கும் விதத்தை ஆசிரியர் மாணவர்களுக்கு செய்து காட்டுதல்.
- ♦ மாணவர்கள் அதை செய்து பார்க்கச் செய்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

- முக ஒப்பனைக்குத் தேவையான ஒப்பனைப் பொருள்களை இனங்கண்டு பெயரிடுவார்.
- முக ஒப்பனையை மேற்கொள்வார்.
- தலை அலங்காரத்திற்குரிய பொருள்களையும் முக அணிகலன்களையும் இனங்கண்டு பெயரிட்டு அலங்காரத்தினை மேற்கொள்வார்.
- உடையலங்காரத்திற்குரிய தாவணி, பாஸ்க், Fan ஆகியவற்றை அமைக்கும் விதத்தை அறிந்து மேற்கொள்வார்.

**தேர்ச்சி 3.0** : பரதநாட்டியத்தின் பல்வேறு அம்சங்களை அபிநயிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : கற்ற உருப்படிகளை இசையுடன் பாடுவார்.

**கற்றற் பேறுகள்** :
- ♦ மிஸ்ர அலாரிப்பினைக் கொலுப்பிப்பார்.
- ♦ கௌத்துவத்தினை இசையுடன் பாடுவார்.
- ♦ வர்ணத்தினை இசையுடன் பாடுவார்.
- ♦ கீர்த்தனத்தினை இசையுடன் பாடுவார்.
- ♦ திருவாசகத்தினை இசையுடன் பாடுவார்.

**செயற்பாடு 3.5.1** : மிஸ்ர அலாரிப்பு, கௌத்துவம், வர்ணம், கீர்த்தனம், திருவாசகம் ஆகிய உருப்படிகளை இசையுடன் பாடுதல்.

**பாடவேளைகள்** : 06

**தரவிருத்தி உள்ளீடுகள்** : உருப்படிகள் எழுதப்பட்ட அட்டைகள், சுருதிப்பெட்டி, இறுவட்டு

**அறிமுகம்** : கற்ற உருப்படிகள் அனைத்தையும் இசையுடன் பாடக் கூடிய திறனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- ♦ இறுவட்டினை ஒலிக்கச்செய்து அவதானிக்கச் செய்தல்.
- ♦ உருப்படி எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ ஆசிரியர் உருப்படியைப் பாடிக்காட்டுதல்.

  மாணவர்களுக்குப் பயிற்சியளித்துப் பாடச்செய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- ♦ மிஸ்ர அலாரிப்பினைக் கொலுப்பிப்பார்.
- ♦ கௌத்துவத்தினை இசையுடன் பாடுவார்.
- ♦ பதவர்ணத்தினை இசையுடன் பாடுவார்.
- ♦ கீர்த்தனையினை இசையுடன் பாடுவார்.
- ♦ திருவாசகத்தை இசையுடன் பாடுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : பரத நாட்டியத்திற்குத் தேவையான முக்கிய அம்சங்களைப் பட்டியற்படுத்துவார்.

**கற்றற் பேறுகள்** :
- ♦ ரஸ பேதங்களை அட்டவணைப்படுத்துவார்.
- ♦ ரஸங்களுக்குரிய ஸ்வரம், தேவதை பாவப் பிரிவுகளைப் பட்டியற்படுத்துவார்.
- ♦ ரஸங்களை வரைவிலக்கணப்படுத்துவார்.

**செயற்பாடு 4.2.2** : ரஸப்ரகரணங்களைக் குறிப்பிடுதல்.

**பாடவேளைகள்** : 06

**தரவிருத்தி உள்ளீடுகள்** : ரஸ விவர அட்டவணை, ரஸம் பற்றிய விளக்க அட்டை, ரஸங்களை
அபிநயித்துக் காட்டும் படங்கள் ஒட்டப்பட்ட அட்டை.

**அறிமுகம்** : ரஸக் கோட்பாடு, ரஸ விபரங்கள் ஆகியவற்றில் பூரண அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

- ♦ ரஸங்களை அபிநயித்துக் காட்டும் அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ ரஸங்களை இனங்காண்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ♦ ரஸத்தின் வரைவிலக்கணம் கூறுதல்.
- ♦ ஒன்பது ரஸங்களின் விவர அட்டவணையைக் காட்சிப்படுத்தல்.
- ♦ ஒவ்வொரு ரஸமாக விவரங்களைக் கூறிக் குறிப்பெடுக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ♦ முழுமையாக விளங்கிக் குறிப்பெடுத்த பின்பு எல்லாப் பாவங்களுடனும் ரஸங்களை அபிநயிக்கச் செய்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும்** :

- ♦ ரஸங்களை இனங்கண்டு கூறுவார்.
- ♦ ரஸ விவரங்கள், பாவங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுவார்.
- ♦ ரஸங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- ♦ ரஸப் ரகரணத்தை அட்டவணைப்படுத்துவார்.

**தேர்ச்சி 5.0 :** சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களை உய்த்தறிவார்.

**தேர்ச்சி மட்டம் 5.3 :** பரதத்தின் வரலாற்றுப் பின்னணிகளை விளங்கிக் கொள்வார்.

**கற்றற் பேறுகள் :**

- ♦ சங்க காலம், சங்கமருவிய காலம் ஆகியவற்றின் வரலாற்றுக் குறிப்புகளையும் சிறப்பம்சங்களையும் வகை பிரிப்பார்.
- ♦ பல்லவர், சோழர் காலங்களின் சிறப்பம்சங்களையும் ஆராய்ந்து முன்வைப்பார்.
- ♦ விஜயநகர, நாயக்கர் காலங்களையும் மறுமலர்ச்சிக் காலத்தையும் வகை பிரிப்பார்.

**செயற்பாடு 5.3.1 :** சங்க, சங்கமருவிய, பல்லவர், சோழர், விஜயநகர, நாயக்கர்,ஆங்கிலேயர் . . . காலம் மறுமலர்ச்சிக் காலங்களின் வரலாற்றுக் குறிப்புகளையும் சிறப்பம்சங்களையும் வகை பிரிப்பார்.

**பாடவேளைகள் :** 15

**தரவிருத்தி உள்ளீடுகள் :** வரலாற்றுக் குறிப்புகள், படங்கள்

**அறிமுகம் :** வரலாற்றுக் காலங்களின் சிறப்பம்சங்களை அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ சிற்ப, ஓவிய, கல்வெட்டுக்கள் சம்பந்தமான படங்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்.
- ♦ ஒவ்வொரு காலமாகக் குறிப்புகள் கொடுத்தல்.
- ♦ சிறப்புற்று விளங்கிய கலைகள், நூல்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களையும் குறிப்பெடுக்கச் செய்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

- ♦ வரலாற்றுக் காலங்களை வகைபிரித்துக் கூறுவார்.
- ♦ அக் காலங்களில் நிலவிய கலைகள், எழுந்த இலக்கியங்கள் பற்றிக் கட்டுரையாக்குவார்.
- ♦ சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், விஜய நகர நாயக்கர் காலம், மறுமலர்ச்சிக் காலங்களின் சிறப்பம்சங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 5.0** : சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களை உய்த்தறிவார்.

**தேர்ச்சி மட்டம் 5.3** : பரதத்தின் வரலாற்றுப் பின்னணிகளை விளங்கிக் கொள்வார்.

**கற்றற் பேறுகள்** : ♦ ஆலயங்களில் சிறப்புடன் விளங்கிய நடனக் கலையைக் கட்டுரையாக்குவார்.

**செயற்பாடு 5.3.2** : ஆலயங்களில் நடனக்கலை என்ற அம்சத்தை அறிதல்.

**பாடவேளை** : 06

**தர உள்ளீடுகள்** : ஆலயங்களின் படங்கள், சுருக்கக் குறிப்புகள்.

**அறிமுகம்** : ஆலயங்களில் நடனக்கலை எவ்வாறு சிறப்புற்றிருந்தது என்பதை நன்கறிந்து விளக்குந் திறனைப் பெறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- ♦ ஆலயங்களின் படங்கள், தஞ்சைப் பெருங்கோயிலின் படம் முதலியவற்றைக் காட்சிப்படுத்தல்.
- ♦ சுருக்கக் குறிப்புகளின் உதவியுடன் நடனக் கலை, நடனச் சிற்பங்கள், கரணங்கள் ஆகியவை பற்றிக் குறிப்பெடுக்கச் செய்தல்.
- ♦ நவசக்தி நடனம், கௌத்துவம் ஆகியனபற்றியும் குறிப்புகளை எழுதச் செய்தல்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

- ♦ ஆலயங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- ♦ நடனக் கலை ஆலயங்களில் எவ்வாறு சிறப்புற்றிருந்தது என்பதைக் கட்டுரையாக்குவார்.
- ♦ ஆலயக் கிரியைகளில் இடம்பெறும் நடனங்கள் பற்றிக் குறிப்பெடுக்கச் செய்தல்.
  உ - ம் : நவசந்தி கொளத்துவம்
- ♦ ஆலயங்களில் இடமபெறும் கிராமிய நடனங்க் பற்றிக் குறிப்பெடுக்கச் செய்தல்.